# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 258A/மா/2017

ஆணை எண். 123/2018

நாள் : 17/05/2018

திரு N. பழனிச்சாமி,
திண்டுக்கல். – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி. – எதிர் மனுதாரர்

திண்டுக்கல் மாவட்டம், பழநி பிரதான சாலை, ரெட்டியார் சத்திரம், எண்.494, பாலராஜக்காம்பட்டி முகவரியில் வசிக்கும் திரு N. பழனிச்சாமி அவர்களின் 15.12.2017 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 18.12.2017 அன்று பெறப்பட்டு, 258A/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

திண்டுக்கல் மாவட்டம், பழநி பிரதான சாலை, ரெட்டியார் சத்திரம், எண்.494, பாலராஜக்காம்பட்டி முகவரியில் வசிக்கும் திரு N. பழனிச்சாமி என்பவர் தான் துப்புரவு ஆய்வாளர் பணியிலிருந்து வயது மூப்பின் காரணமாக 30.06.1999–இல் ஓய்வு பெற்றதாகவும், திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ஸ்ரீரங்கம் கோட்டத்தில் துப்புரவு ஆய்வாளராகப் பணியாற்றியபோது, தன்னிடம் பிடித்தம் செய்த சேமநல நிதி மற்றும் சிறப்புசேமநல நிதி ஆகியவைகளுக்கு உரிய வட்டித் தொகை தனக்கு வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மேலும், 5–வது ஊதியக் குழு ஊதிய வித்தியாசத் தொகைக்கும் வட்டி வழங்கப்படவில்லை எனவும் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் ஓய்வு பெற்று சுமார் 18 ஆண்டுகள் கடந்து விட்டன. அவர் தற்பொழுது 76 அகவையிதனை எய்தியிருப்பார். இத்தனை ஆண்டுகள் கால அளவிலும் அவரது சேமநல நிதிக்கான வட்டித் தொகை வழங்கப்படாதது ஏற்புடையதல்ல. மேலும், 5–வது ஊதியக் குழுவின் பரிந்துரைக்குப் பின் 6–வது மற்றும் 7–வது ஊதியக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ள நிலையில் 5–வது ஊதியக் குழு தொகை தீர்வு செய்யப்படாததும் மிகவும் வேதனைக்குரியது. முறையீட்டு மனுதாரரின் கோரிக்கைகள் மீது விதிகளின்படி மேலும் தாமதம் செய்யாமல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி நடவடிக்கை உடன் மேற்கொள்ள வேண்டும் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, மே திங்கள், 17–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

21.5.18

21/5/18

பெறுநர்

1. உதவி ஆணையர்,
ஸ்ரீரங்கம் கோட்டம்,
திருச்சி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

2. மாநகராட்சி ஆணையர்,
திருச்சி மாநகராட்சி,
திருச்சிராப்பள்ளி.

3. திரு N. பழனிச்சாமி,
ரெட்டியார் சத்திரம் அஞ்சல்,
பழநி மெயின்ரோடு – 624 622.
திண்டுக்கல் மாவட்டம்.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்